

வங்கக் கடலில் ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் உருவாக வாய்ப்பு உள்ளதை முன்னிட்டு மேற்கொள்ளப் படவேண்டிய ஆயத்த நடவடிக்கைகள் குறித்து வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் சென்னை எழிலகத்தில் உள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் காணொலி காட்சி வாயிலாக கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் மாநகராட்சி ஆணையர்களுடன் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது கூடுதல் தலைமைச் செயல முனைவர் எம். சாய் குமார், பேரிடர் மேலாண்மை ஆணையர் சிஜி தாமஸ் வைத்யன், பேரிடர் மேலாண்மை இயக்குநர் சி.முத்துக்குமரன், மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.



உலக மீன்வள தின கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக நேற்று முன்தினம் (26.11.2025) சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் கலந்துகொண்டு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத் தலைவர் ந.கௌதமன், தமிழ்நாடு மீனவர் நலவாரியத் தலைவர் டாக்டர்.அ. ஜோசப் ஸ்டாலின், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அரசு செயலாளர் டாக்டர். சூ. சுப்பையன், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை இயக்குநர், க.வீ.முரளிதரன், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அலுவலர்கள், மீனவர்கள், மீன் வளர்ப்போர் மற்றும் மீனவர் கூட்டுறவு சங்கப் பிரதிநிதிகள் திரளாக கலந்து கொண்டனர்.

## மொடக்குறிச்சியில் சுதந்திரப் போராட்ட வீரர்

# மாவீரன் பொல்லான் முழு உருவச் சிலையுடன் கூடிய அரங்கம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

ஈரோடு, நவ. 28-

**ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சியில் ரூ.4.90 கோடி செலவில் சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் பொல்லான் அவர்களின் முழு திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.11.2025) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில் ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி, ஜெயராமபுரத்தில் 4 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலையின் நம்பிக்கைக்குரிய படைத்தளபதி சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் பொல்லான் அவர்களின் முழு திருவுருவச் சிலை யுடன் கூடிய அரங்கத்தை திறந்து வைத்தார்.

### தமிழ்நாட்டுக்கு பெருமை சேர்த்தோருக்கு மரியாதை!

தமிழ்நாட்டின் புகழ்சால் பெருந்தகையாளர்கள், தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு அரும்பாடு பட்டு தமிழ்நாட்டிற்குப் பெருமைத் தேடித்தந்த அறிஞர் பெருமக்கள், சமூகநீதி, விடுதலை உணர்வுகளை ஊட்டிவளர்த்த கவிஞர்கள், இசை மேதைகள், தமிழ்நாட்டின் தியாக வரலாற்றுக்கு உன்னத சாட்சியங்களாக விளங்கும் தியாகிகள், மேதைகள் மற்றும் அறிஞர்களின் நினைவுகளைப் போற்றிப் பெருமைப் படுத்தும் வகையிலும், தமிழ் சமுதாயத்திற்கு அவர்களின் பங்களிப்பை பெருமைப்படுத்தும் வகையிலும், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் நினைவகங்கள், திருவுருவச் சிலைகள், அரங்கங்கள், நினைவுத் தூண்கள், நினைவுச் சின்னங்கள் ஆகியவை அமைக்கப் பட்டு, சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான அரசு பொறுப் பேற்றப் பின்னர், விடுதலைப் போரில் இன்னுயிர் ஈந்தும், சொத்து சுகங்களை இழந்தும், தியாகங்கள் புரிந்த சுதந்திரப் போராட்ட தியாகிகளைப் போற்றிப் பெருமைப்படுத்திடும் வகையில், கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. அவர்கள் சிறையில் இழுத்த செக்கு வைக்கப்பட்டிருக்கக் கூடிய மண்டபம், காந்தி மண்டபத்தில் பொலிவூட்டப்பட்டு அங்கு அவரது மார்பளவு சிலை, வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களுக்கு திருவுருவச் சிலை, மருது சகோதரர்கள் மற்றும் வீரமங்கை வேலுநாச்சியார் ஆகியோருக்கு திருவுருவச் சிலை, கோயம்புத்தூர் வ.உ.சி. பூங்காவில் வ.உ. சிதம்பரனார் அவர்களின் முழு உருவச் சிலை, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்களுக்கு திருவுருவச் சிலை, டாக்டர் முத்து லட்சுமி ரெட்டி அம்மையார் அவர்களுக்கு திருவுருவச் சிலை, என பல்வேறு தியாக சீலர்களுக்கு சிலைகளை நிறுவி, மணிமண்டபங்கள் அமைத்து அவர்களின் புகழ் போற்றி வருகிறது.

### சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் பொல்லான் அவர்களின் முழு திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கத்தை திறந்து வைத்தல்

ஈரோடு மாவட்டம், அரச்சலூர் அருகே உள்ள நல்லமங்காபாளையம் கிராமத்தில் பிறந்த பொல்லான், சிறுவயதிலிருந்தே வாள், வில், மற்போரில் சிறந்த முறையில் பயிற்சிகள் பெற்றார். மாவீரன் பொல்லான் பதினெட்டாம் நூற்றாண்டில் ஆங்கிலேயரின் அத்துமீறலுக்கு எதிராகப் போர்ப்புரிந்த தீரன் சின்னமலையின் போர்ப்படையிலும், ஒற்றர் படையிலும் தளபதியாகத் திகழ்ந்தவர். தீரன் சின்னமலை, வெள்ளையர் படையை எதிர்த்து 1801ல் நடைபெற்ற பவானிப்போர், 1802ல் நடைபெற்ற ஓடாநிலைப் போர், 1,803ல் நடைபெற்ற அரச்சலூர் போர் ஆகிய மூன்று போர்களிலும் பெற்ற வெற்றிகளுக்கு மூலகாரணமாகத் திகழ்ந்தவர் மாவீரன் பொல்லான் ஆவார். அதனால், ஆங்கிலேயர்களின் சினத்திற்குள்ளான மாவீரன் பொல்லான் ஆங்கிலேய படைத்தளபதி கர்னல் ஹாரிஸ் அவர்களின் படை வீரர்களால், ஓடாநிலை கோட்டைக்கு அருகில் ஜெயராமபுரத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மாவீரன் பொல்லான் அவர்களது வீரத்தைப் போற்றும் வகையில், ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், வடுகபட்டி கிராமம், ஜெயராமபுரத்தில் 4 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலையின் நம்பிக்கைக்குரிய படைத்தளபதி சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் பொல்லான் அவர்களின் முழு திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கம் அமைக்கப்பட்டு, முதலமைச்சர் அவர்களால் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. பின்னர், மாவீரன் பொல்லான் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி, அரங்கத்தை பார்வையிட்டார்.

### பொல்லான் வாரிசுதாரர்களுக்கு முதல்வர் சிறப்புச் செய்தார்!

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் பொல்லான் அவர்களின் வாரிசுதாரர்கள் - வரதராஜன், முருகன், வீரன், பழனிச்சாமி, ராஜன் ஆகியோருக்கு சால்வை அணிவித்து சிறப்பு செய்தார்.

பின்னர், சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் பொல்லான் அவர்களின் வாரிசுதாரர்கள் மற்றும் பயனாளிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பூமிதான வாரிய நில விநியோக பத்திரங்களை வழங்கினார்.

மாவீரன் பொல்லான் அவர்களின் முழு திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கத்தை திறந்து வைத்தமைக்காக, ஆதித் தமிழர் பேரவையின் நிறுவனத் தலைவர் இரா. அதியமான், நிர்வாகி கு. ஜக்கையன், தமிழ் புலிகள் கட்சியின் நாகை திருவள்ளுவன், திராவிட தமிழர் கட்சியின் திருமதி வெண்மணி, தமிழ்நாடு அருந்ததியர் இளைஞர் முன்னணியின் எஸ்.டி. கல்யாண சுந்தரம், சண்முகம், சமூக நீதி மக்கள் கட்சியின் (மாவீரன் பொல்லான்) வடிவேல் ராமன், விடுதலை வேங்கைகள் கட்சியின் இரா. தமிழன்பன், தமிழ் சிறுத்தைகள் கட்சியின் சு. அகத்தியன், தமிழ்நாடு பெஸ்ட் ஆசிரியர் அரசு ஊழியர் கூட்டமைப்பின் எல். ரவி, தமிழ்நாடு சாக்கிய அருந்ததியர் சங்கத்தின் எழுத்தாளர் மதி வண்ணன், அருந்ததிய சமூக சேவை மடத்தின் செல்லகுமார், சமூக விடுதலை கட்சியின் என்.பி. ஆறுமுகம், திராவிடர் விடுதலை கட்சியின் அன்பு மகேஷ், அருந்ததி மக்கள் கட்சியின் சுப்பிரமணி, தாஸ்கோ அமைப்பின் பெருமாள்ராஜ்;

கொங்குநாடு திராவிடக் கட்சியின் ஏ.ஜி. பாட்டன் சக்திவேல், தென்னாட்சி மக்கள் கட்சியின் சின்னதம்பி, அறம் மக்கள் கட்சியின் எல்.எம். காமராஜ், அருந்ததியர் விடுதலை முன்னணியின் என்.டி.ஆர்., நமது தேசம் கட்சியின் என். லஷ்மிபதி, அருந்ததியர் மக்கள் நலச் சங்கத்தின் சீனிவாசன், இந்திய சன சங்கத்தின் பேராசிரியர் முத்துசாமி, துரைசாமி, ஜனநாயக மக்கள் கழகத்தின் அசோக் கண்ணன், தமிழ்நாடு அருந்ததியர் சங்கத்தின் கண்ணன், மதுரை வீரன் மக்கள் விடுதலை இயக்கத்தின் பி. ஆறுமுகம், தமிழர் சமூகநீதிக் கழகத்தின் சுரா. தங்க பாண்டியன், மக்கள் விடுதலைக் கழகத்தின் ஆர். சீனிவாசராகவன், சமூக விடுதலை முன்னணியின் இராஜசேகரன், தலித் விடுதலை இயக்கத்தின் கிச்சா, தமிழ்நாடு அருந்ததியர் சங்கத்தின் கே.ஏ. வரதராஜன், திராவிட சமத்துவ கட்சியின் அம்பேத் அண்ணாதுரை, தமிழர் தொழிலாளர் கட்சியின் மாகாளியப்பன், இந்திய குடியரசு கட்சியின் செபஸ்டியன், YGS மாநிலத் தலைவர் சி. பெருமாள்;

கொங்கு விடுதலை புலிகள் கட்சியின் எஸ். விஸ்வநாதன், திராவிட எழுச்சி பேரவையின் தலைவர் சக்திவேந்தன், சமூக நீதி பாதுகாப்பு கழகத்தின் ஆர். முத்துராஜ், அருந்ததியர் மக்கள் முன்னேற்றக் கழகத்தின் ஆவடி ரங்கநாதன், அருந்ததியர் மக்கள் கட்சியின் இராமச்சந்திரன், அனைத்துலக அருந்ததியர் மக்கள் பேரவையின் ரமேஷ், அருந்ததியர் விடுதலைக் கழகத்தின் முனைவர் இளந்தமிழன், அருந்ததி கட்சியின் பி. புருசோத்தமன், ஜெய்பீம் மக்கள் கட்சியின் அறிவழகன், திராவிட புரட்சி கழகத்தின் சவுந்திர பாண்டியன், நாத்திக ராவணன், ஆதித் தமிழர் ஜனநாயக பேரவையின் அ.சு. பவுத்தன், அருந்ததியர் ஆசிரியர் அரசு பணியாளர் கூட்டமைப்பின் இரா. பால்ராஜ், அருந்தமிழர் முன்னேற்ற பேரவையின் பொன்னுசாமி, ஜெய்பீம் விடுதலை கட்சியின் ஆறுமுகம் உள்ளிட்ட பல்வேறு அமைப்பின் நிர்வாகிகள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

இவ்விழாவில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு. முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி. என்.கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்தியூர் செல்வராஜ், கே.இ. பிரகாஷ், மாதேஸ்வரன், சட்டமன்ற உறுப்பினர்கள் வி.செந்தில்பாலாஜி, வி.சி.சந்திரகுமார், ஏ.ஜி. வெங்கடாசலம், ஈ.ஆர். ஈஸ்வரன், ஆதிதமிழர் பேரவையின் நிறுவனத் தலைவர் அதியமான் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளின் தலைவர்கள், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன், ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் எஸ். கந்தசாமி, தூய்மைப் பணியாளர் நல வாரியத்தின் தலைவர் டாக்டர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி, துணைத் தலைவர் திருமதி கனிமொழி பத்மநாபன், மாவீரன் பொல்லான் அவர்களின் வாரிசுதாரர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### நெல்லையில்

# மாற்றுக்கட்சிகளைச் சேர்ந்த 250 பேர் கழகத்தில் இணைந்தனர்!

## மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் முன்னிலையில்!

நெல்லை.நவ.25–

நெல்லை கிழக்கு மாவட்டம் வள்ளியூரில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் வள்ளியூர் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் அலெக்ஸ் அப்பாவு ஏற்பாட்டில் அ.தி.மு.க த.வெ.க கட்சியினை சேர்ந்த சுமார் 250 பேர் அக்கட்சிகளில் இருந்து விலகி நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம. கிரகாம்பெல் முன்னிலையில் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் தலைமையை ஏற்றும்,சிறப்பாக நடந்து வரும் ஆட்சியை தெரிந்து கொண்டும்,புரிந்து கொண்டும் தமிழ்நாட்டில் ‘எல்லார்க்கும் எல்லாம்’ என்ற அடிப்படையில் ஏழை, எளிய, மக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து அதனை நடைமுறைப்படுத்தி செயல்படுத்தி வரும் திராவிட மாடல் முதலமைச்சர் அவர்களின் தலைமையை ஏற்று மாற்றுக் கட்சியினர் கழகத்தில் தொடர்ந்து இணைந்து வருகின்றனர்.

அதன்படி வள்ளியூரில் உள்ள நெல்லை கிழக்கு மாவட்ட அலுவலகத்தில் வள்ளியூர் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் அலெக்ஸ் அப்பாவு ஏற்பாட்டில் பணகுடி, ராதாபுரம்,கடம்பன்குளம்,கலந்தபனை, வள்ளியூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து அ.தி.மு.க.,த.வெ.க. உள்ளிட்ட கட்சியினர் சுமார் 250 பேர் அக்கட்சியிலிருந்து விலகி நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம. கிரகாம்பெல் முன்னிலையில் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். கழகத்தில் இணைந்த அவர்கள் அனைவரையும் வரவேற்று கழக இருவண்ண சால்வை மாவட்ட பொறுப்பாளர் ம. கிரகாம்பெல் அணிவித்தார்.

நிகழ்வில் தொகுதி பார்வையாளர் சிவராஜ், ஒன்றிய செயலாளர் ஜோசப் பெல்சி,ஒன்றிய கவுன்சிலர் கோசிஜின், நகர செயலாளர் சேதுராமலிங்கம், முன்னாள் ஒன்றிய குழு தலைவர் ஆதி பரமேஸ்வரன், கழக நிர்வாகி முத்துக்குமார், கவுன்சிலர் கோபி கோபால கண்ணன்,ஹரிதாஸ்,வைகுண்டராஜன், உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.




கடலூர் கிழக்கு மாவட்டம், குறிஞ்சிப்பாடி ஒன்றிய கழகம் சார்பில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளையொட்டி, வடலூர் வள்ளலார் தெய்வநிலைய பெருவெளியில் துவங்கிய மாரத்தான் ஓட்டம், குறிஞ்சிப்பாடி பேருந்து நிலையம் அருகே முடிவுற்றது. இந்த மாரத்தான் போட்டியை மாவட்டக் கழகப் பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன் கொடியசைத்து துவக்கி வைத்து, போட்டியில் வெற்றிப்பெற்ற மற்றும் பங்கேற்றவர்களுக்கு கோப்பைகள்,பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கி பாராட்டினார். இந்நிகழ்வில் வி.சிவக்குமார், ஆர்.நாராயணசாமி, த.தமிழ்ச் செல்வன், சு.சிவக்குமார், கே.பி.ஆர்.பாலமுருகன், சுப்புராயலு, கோகிலா குமார், ஆர்.ராமர் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

---

# உதயநிதி பிறந்தநாள் உற்சாகத் திருநாள்!

உதயசூரியன் வழித்தோன்றல் இளையசூரியன் வாழியவே
துணைமுதல்வர் பதவியிலே ஜொலிப்பவரே வாழியவே
கலைஞருக்கு புகழ்சேர்க்கும் கதிரவனே வாழியவே
தளபதியின் தலைமகனே தர்மராசா வாழியவே
துர்க்காஅம்மை ஈன்றெடுத்த தூயவரே வாழியவே
திராவிடத்தைக் காக்கவந்த சின்னவரே வாழியவே
தந்தைபெரியார் விரும்பிய சமூகநீதியே வாழியவே
அறிஞர் அண்ணா பேரனாக அருந்தமிழே வாழியவே
முத்துவேலர் பரம்பரையின் முத்தமிழே வாழியவே
தயாளுத்தாய் தாலாட்டை ரசித்தவரே வாழியவே
செம்மொழியைக் காக்கப்பிறந்த செந்தமிழே வாழியவே
தினவெடுத்த தோள்கொண்ட சிங்கமே வாழியவே
திரையுலகில் சாதித்த கலைமதியே வாழியவே
நாடாளப் பிறப்பெடுத்த மாமன்னன் வாழியவே
நட்புக்கு இலக்கணமாம் கர்ணனாக வாழியவே
அறிவுத்திருவிழா அரங்கேற்றிய அறிவுச்சுடரே வாழியவே
வள்ளலில் உயர்ந்தவனாம் பாரியாக வாழியவே
வீரத்துக்கு அடையாளம் விஜயாலயனாய் வாழியவே
ஆளுமையால் உலகுஆண்ட இராஜராஜனாய் வாழியவே
சனாதனம் ஒழிக்கவந்த திராவிடசிசு வாழியவே
ஏழையரின் வாட்டம்போக்கும் ஏந்தலே வாழியவே
இளைஞர்அணி தம்பிகளின் இதயவேந்தே வாழியவே
இலக்கியஅணி போற்றுகின்ற சங்கத்தமிழ் வாழியவே
பாட்டாளி வர்க்கத்தின் பாதுகாவலர் வாழியவே
இந்தித்திணிப்பை எதிர்த்திடும் எழுஞாயிறே வாழியவே



விளையாட்டு கண்மணிகளின் ஈகைவள்ளல் வாழியவே
பகைவெல்ல பாய்ந்திடும் வரிப்புலியே வாழியவே
கொஞ்சுமொழி தினம்பேசும் கொற்றவரே வாழியவே
அஞ்சுதல் அறிந்திடாத அரிமாவே வாழியவே
வற்றாத காவிரிபோல் வளம்சேர்க்க வாழியவே!
வாழியவே வாழியவே வாழ்வாங்கு வாழியவே!

**வி.பி.கலைராஜன்**
கழக இலக்கிய அணிச் செயலாளர்

